## க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2014

## பொருளியல் I

## விடையளித்தலுக்கான வழிகாட்டல்

| வினா இலக்கம் | விடை |
|---|---|
| 1 | 5 |
| 2 | 3 |
| 3 | 4 |
| 4 | 1 |
| 5 | 3 |
| 6 | 3 |
| 7 | 3 |
| 8 | 3 |
| 9 | 5 |
| 10 | 4 |
| 11 | 1 |
| 12 | 4 |
| 13 | 5 |
| 14 | 3 |
| 15 | 2 |
| 16 | 3 |
| 17 | 3 |
| 18 | 5 |
| 19 | 2 |
| 20 | 4 |
| 21 | 1 |
| 22 | 3 |
| 23 | 3 |
| 24 | 4 |
| 25 | 3 |

| வினா இலக்கம் | விடை |
|---|---|
| 26 | 2 |
| 27 | 5 |
| 28 | 2 |
| 29 | 5 |
| 30 | 2 |
| 31 | 2 |
| 32 | 4 |
| 33 | 3 |
| 34 | 1 |
| 35 | 2 |
| 36 | 5 |
| 37 | 4 |
| 38 | 1 |
| 39 | 4 |
| 40 | 5 |
| 41 | 2 |
| 42 | 4 |
| 43 | 5 |
| 44 | 4 |
| 45 | 1 |
| 46 | 1 |
| 47 | 2 |
| 48 | 4 |
| 49 | 3 |
| 50 | 5 |

**2 x 50 = 100 புள்ளிகள்**

[பக். 2 ஐப் பார்க்க

# க.பொ.த. (உ.தரம்) உதவிக் கருத்தரங்கு - 2014
# பொருளியல் II
## விடையளித்தலுக்கான வழிகாட்டல்


01. (i)

| நியதிகள் | பொருளாதார முறைமைகள் |
|---|---|
| 1. தீர்மானமெடுத்தலும் தீர்மானங்களை இணைப்புச் செய்யும் பொறிமுறையும் | 1. சந்தைப் பொருளாதா முறை<br>2. கட்டளைப் பொருளாதார முறை<br>3. பாரம்பரிய பொருளாதார முறை |
| 2. சொத்துரிமையின் இயல்பு | 1. முதலாளித்துவப் பொருளாதார முறை<br>2. சமவுடமைப் பொருளாதார முறை |
| 3. உரிமையின் இயல்பு | 1. பாரம்பரிய பொருளாதார முறை<br>2. கட்டளைப் பொருளாதார முறை<br>3. சந்தைப் பொருளாதா முறை |

(06 புள்ளிகள்)

(ii)
- பாரம்பரிய பொருளாதார முறைமையின் கீழ் பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு முன்னுரிமை அளித்து கொடுத்து தலைவர் அல்லது தலைமைக்குழுவின் வழிகாட்டலின் கீழ் உற்பத்தி பங்கிடப்படும்.
- கட்டளை பொருளாதார முறையில் மத்திய திட்டமிடல் குழுவின் தீர்மானத்தின்படி சமூக நலநோக்குடன் உற்பத்தி பங்கிடப்படும்.
- சந்தை பொருளாதாரத்தின் கீழ் காரணிச் சந்தையின் நடத்தையின் அடிப்படையில் வருமானப் பங்கீட்டின் அடிப்படையில் உற்பத்தி பங்கிடப்படும். (03 புள்ளிகள்)

(iii)




- உள்ளீடு குறைதல், விளைதிறன் அதிகரிப்பதால் கைத்தொழில் பண்டப்பகுதியில் மாத்திரம் உற்பத்தி சாத்திய வளையி வலதுபுறமாக மாறும். (படத்திற்கு 02 புள்ளிகள்)
(விளக்கம் 02 புள்ளிகள்

(iv)
- அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு விலைமுறைமை, அரச திட்டமிடல் முறைமை என்ற இரு முறைகளிலும் நடைபெறல்.
- சொத்துரிமை, தனியார் துறை போலவே அரச துறைக்கும் காணப்படல்.
- தனியார் முயற்சியாண்மை போலவே அரச முயற்சியாண்மையும் காணப்படல்.
- தனியார் தனிநபர் நலக் குறிக்கோளுடனும் அரசதுறை விரிந்த நோக்கத்துடனும் செயற்படல். அதாவது இலாபம் மற்றும் சமூகநல நோக்கு நிறைதொழில் வாய்ப்பை ஏற்படுத்தல் அரசியல் நோக்கம் என்பவற்றுடன் செயற்படல். (03 புள்ளிகள)

(v) மத்தியதிட்டமிடல் முறையை நடைமுறைப்படுத்திய பெரும்பாலான நாடுகள் அதனைக் கைவிட்டு சந்தை முறைமைக்கு மாறியுள்ளமை உண்மை நிலையாகும். எனவே சமவுடமைக்கே உரிய சில குறைபாடுகள் இதற்குக் காரணமாய் அமைந்துள்ளதால்,
- திட்டமிடுவதிலும் அதனைச் செயற்படுத்துவதிலும் பிரச்சினைகள் ஏற்படல்
- அதிகாரிவாதம்
- பொருளியல் சுதந்திரம் வரையறுத்துக் காணப்படல்
- சூழலின் தாக்கம்
- தெரிவுச் சுதந்திரம் குறைவு (04 புள்ளிகள்)

[பக். 3 ஐப் பார்க்க


**02.** (i) குறிப்பிட்டதொரு சந்தர்ப்பத்தில் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளில் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் நிலையாகக் காணப்படும்போது குறிப்பிட்ட பண்டத்தின் விலை, தொகை என்வற்றிற்கிடையிலான எதிர்கணியத் தொடர்பு உள்ளதை விளக்குவதாகும். (02 புள்ளிகள்)

(ii) குறித்த பொருளின் விலை தொகையளவு என்பவற்றுக்கிடையே நேர்கணியத் தொடர்பு பின்வரும் நிலைமைகளில் ஏற்படலாம்.

- கிபன் பண்டம்
- செலுத்தப்படும் விலையின் மூலம் அதன் தரம் வெளிப்படுத்தப்படும் பண்டம்
- காட்சிப்படுத்தக் கூடிய பண்டம் (02 புள்ளிகள)

(iii) (அ) அத்தியாவசியப் பண்டம்
(ஆ) ஆடம்பரப் பண்டம்
(இ) பதிலீட்டுப் பண்டம்
(ஈ) நிரப்புப்பண்டம் (04 புள்ளிகள்)

(iv) $Qd = 600 - 10P$
$Qs = 10P$




(சமநிலை 02 புள்ளிகள்)
(02 புள்ளிகள்)

$$Qd = Qs$$
$$600 - 10P = 10P$$
$$-10P - 10P = -600$$
$$\frac{-20P}{-20} = \frac{-600}{-20}$$
$$P = 30$$
$$Qd = 600 - 10P$$
$$Qd = 600 - 10 \times 30$$
$$Qd = 300$$
(02 புள்ளிகள்)

(ii) நுகர்வோர் மிகை
ரூபா. 50 × 100 = ரூபா. 5000

உற்பத்தியாளர் வருவாய்
ரூபா. 50 × 500 = ரூபா. 25000

(02 புள்ளிகள்)

(iii) குறைந்தபட்ச விலைக்கு முன் $= ரூ. \frac{30 \times 300}{2} = ரூ. \frac{9000}{2} = ரூ. 4500$

குறைந்தபட்ச விலைக்கு பின் $= ரூ. \frac{10 \times 100}{2} = ரூ. \frac{1000}{2} = ரூ. 500$

நுகர்வோர் மிகையின் மாற்றம் = (500 - 4500) = - 4000 (02 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

(iv) குறைந்தபட்ச விலைக்கு முன் $= ரூ. \frac{30 \times 300}{2} = ரூ. \frac{9000}{2} = ரூ. 4500$

குறைந்தபட்ச விலைக்கு பின் $= ரூ. \frac{10 \times 100}{2} = ரூ. \frac{1000}{2} = ரூ. 500$

நுகர்வோர் மிகையின் மாற்றம் = (500 - 4500) = - 4000 (02 புள்ளிகள்)

(v) மிகை உற்பத்தியைக் கொள்வனவு செய்வதற்கு அரசுக்கு ஏற்படும் செலவு = ரூபா. 50 x 400 = ரூபா. 20000 (02 புள்ளிகள்)

(vi) இழந்த நலச் செலவு

குறைந்தபட்சக் கட்டுப்பாட்டு விலை காரணமாக பொருளாதார மிகையில் ஏற்பட்ட மாற்றம் = (ரூபா. 8000 - ரூபா. 4000)
= ரூபா. 4000

மிகையைக் கொள்வனவு செய்ய அரசுக்கு ஏற்படும் செலவு
இலக்கப்படும் நலச் செலவு = ரூபா. (4000 - 20000)
= ரூபா. 16000 (02 புள்ளிகள்)

(மொத்தம் 2 x 6 = 12 புள்ளிகள்)

03. (i) **குறுங்கால உற்பத்தித் தொழிற்பாடு**

நிலையான காரணிகளுடன் மாறும் காரணிகளை, அதிகரித்து உற்பத்தியை மேற்கொள்ளும்போது குறித்தவொரு மட்டத்தின் பின் எல்லை விளைவும் சராசரி விளைவும் குறைந்து செல்லத் தொடங்கும். இது குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி என இனங்காணலாம். (02 புள்ளிகள்)

**நீண்டகால உற்பத்தித் தொழிற்பாடு**

உற்த்தித் தொழிற்பாட்டில் சகல உள்ளீடுகளையும் மாற்றியமைக்கும்போது வெளியீடானது மாற்றமடைவது அளவுத்திட்ட விளைவு விதி செயல்படுவதனாலாகும். இங்கு கூடிச் செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி, மாறா அளவுத்திட்ட விளைவு விதி, குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதி என்பன தொழிற்படும். (02 புள்ளிகள்)

(ii) **குறுங்கால சராசரி மாறும் செலவு**

உற்பத்தித் தொழிற்பாட்டின்போது வெளியீடானது அதிகரிக்கும். ஆரம்பத்தில் AVC வீழ்ச்சியடைந்து குறைந்த இழிவுப் புள்ளியை நோக்கி வந்தபின் மீண்டும் அதிகரித்துச் செல்லும். குறைந்து செல்லும் எல்லை விதியே அதற்குக் காரணமாகும். எல்லை விளைவு அதிகரிக்கும்போது AVC வீழ்ச்சியடைவதுடன் எல்லை விளைவு குறையும்போது AVC உயர்வடையும். (02 புள்ளிகள்)

**நீண்டகால சராசரி மாறும் செலவு**


வெளியீடு அதிகரிக்கும் போது ஆரம்பத்தில் LRAC வீழ்ச்சியடைந்து பின் அதிகரிக்கும். அளவுத்திட்ட சிக்கனம் தொழிற்படுவதால் LRAC வீழ்ச்சியடைவதுடன் அளவுத்திட்ட சிக்கனமின்மை தொழிற்படும்போது நீண்டகால சராசரிச் செலவு அதிகரிக்கும். (02 புள்ளிகள்)

(iii) **தனியுரிமை நிறுவனம்** எதிர்நோக்கும் கேள்விக் கோடு இடமிருந்து வலமாக மேலிருந்து கீழாகச் சாய்ந்து செல்லும். சந்தைத் தகவல்களின் பூரணமற்ற தன்மையே இதற்குக் காரணமாகும். சந்தைத் தகவல்கள் பூரணமற்ற நிலையில் நிறுவனம் விலையில் ஆதிக்கம் செலுத்த முடியும். இதனால் நிறுவனத்தின் கேள்விக் கோடு கீழ் நோக்கிச் சரிந்து செல்லும். (02 புள்ளிகள்)

நிறைபோட்டிச் சந்தையின் கேள்விக் கோடு பூரண நெகிழ்ச்சிக் கேள்விக் கோடாகும். சந்தைத் தகவல்களின் ஓரினத்தன்மை வாய்ந்த பொருட்கள், எண்ணிறைந்த உற்பத்தியாளர்கள் காணப்படுவதற்கு நிறுவனங்கள் விலையை ஏற்போனாகச் செயற்படும். (02 புள்ளிகள்)

[பக். 5 ஐப் பார்க்க

(iv)




(படத்திற்கு 02 புள்ளிகள்)

இங்கு P என்ற விலையில் மொத்த வருமானத்தில் மொத்த மாறும் செலவும் உள்ளடக்கப்படுவதைக் காணலாம். இதனால் நிலையான செலவினால் மாத்திரமே நட்டம் ஏற்படலாம். நிறுவனத்தை மூடினாலும் நிலையான செலவினால் பாதிப்பு ஏற்படுவதன் காரணமாக இந்நிறுவனத்தை மேலும் நடத்திச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. எனினும் மென்மேலும் விலை வீழ்ச்சியடைந்தால் அல்லது மாறும் செலவு அதிகரித்தல் தமது வருவாயில் இருந்து மாறும் செலவை ஈடுசெய்ய முடியாது போவதால் நிறுவனத்தை மூடவேண்டிய ஏற்படலாம். (02புள்ளிகள்)

(v)

| **தனியுரிமைப் போட்டிச் சந்தை** | **தனியுரிமைச் சந்தை** |
|---|---|
| • அதிகளவில் நிரம்பலாளர் காணப்படல்<br>• சந்தையில் நுழையவும் வெளியேறவும் தடை இல்லாதிருத்தல்<br>• உற்பத்தி செய்யப் பொருட்களில் வேறாக்கம் செய்யப்பட்டிருத்தல்.<br>• விளம்பரம் காணப்படும். | • தனியொரு நிரம்பளாளர் மட்டுமே<br>• இயற்கையாக அல்லது செயற்கையாக பிரவேசச் சுதந்திரத்துக்குத் தடை<br>• சிறப்புத்தன்மை வாய்ந்த உற்பத்தி<br>• நிறுவனத்தை அறிமுகம் செய்ய மட்டும் வரையறுத்த விளம்பரம் |

(04 புள்ளிகள்)

**04.** (i) அரசாங்கத்தின் உற்பத்திச் செலவின் அடிப்படையிலேயே உற்பத்தி பெறுமதி மதிப்பிடப்படும் செலவு மதிப்பிடப்படுவது,

(அ) ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவு

(ஆ) பண்டங்கள் சேவைகளினது கொள்வனவுச் செலவு

(இ) மூலதனத் தேய்வை மதிப்பிடல் (03 புள்ளிகள்)

(ii) 1. மொத்த உள்நாட்டு உற்பத்தி= மொத்த உள்நாட்டுச் செலவு + தேறிய ஏற்றுமதி

1200 = 1800 + தேறிய ஏற்றுமதி

1200 - 1800 = தேறிய ஏற்றுமதி

- 600 = தேறிய ஏற்றுமதி (01 புள்ளி)

2. செலவிடத்தக்க தேசிய வருமானம் = மொத்த உள்நாட்டு உற்பத்தி + வெளிநாட்டு தேறிய காரணி வருமானம் + வெளிநாட்டு தேறிய நடைமுறை மாற்றல்கள்

= 1200 + (-800) + 900

= 1300 (01 புள்ளி)

3. மொத்த உள்நாட்டு சேமிப்பு = மொத்த உள்நாட்டு உற்பத்தி - நுகர்வு

= 1200 - 600

= 600 (01 புள்ளிகள்)

4. தேசிய சேமிப்பு = செலவிடத்தக்க தேசிய வருமானம் - நுகர்வு

= 1300 - 600

= 700 (01 புள்ளி)

[பக். 6 ஐப் பார்க்க

5. தேறிய ஏற்றுமதி -600
வெளிநாட்டு தேறிய காரணி வருமானம் -800
வெளிநாட்டு தேறிய நடைமுறை மாற்றல் 900
நடைமுறைக் கணக்கு மீதி -500 (01 புள்ளி)

6. மெய் உள்நாட்டு உற்பத்தி $= \frac{1200}{120} \times 100 = 1000$

பொருளாதார வளர்ச்சி வீதம் $= \frac{(\text{குறிப்பிட்ட ஆண்டின் மெய் உள்நாட்டு உற்பத்தி} - \text{முன்னைய ஆண்டின் மெய் உள்நாட்டு உற்பத்தி})}{\text{முன்னைய ஆண்டின் மெய் உள்நாட்டு உற்பத்தி}} \times 100$

$= \frac{(1000 - 900)}{900} \times 100$

$= 11.1\%$ (02 புள்ளிகள்)

(iii) ★ சந்தையில் இரண்டாம் முறை விற்கப்படும் பொருட்கள்
★ இடைநிலைப் பொருட்களுக்கான செலவு
★ நிதிப்பத்திரங்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்
★ மாற்றல் செலவுகள் (1 புள்ளி வீதம் 03 புள்ளிகள்)

(iv) கூட்டப்பட்ட பெறுமதி கணிப்பிடுவது
வெளியீடு - உள்ளீடு மூலம்
அதன்படி கூட்டப்பட்ட பெறுமதி நிலவுவது
காரணிகளுக்கான கொடுப்பனவு - (சம்பளம், வட்டி, கூலி, இலாபம்) மூலதனப் பெறுமானத் தேய்வும் ஆகும்.
வருமான வழியில் கணிப்பதும் காரணி வருமானங்கள் மூலம் (சம்பளம், வட்டி, கூலி, இலாபம்)
எனவே இவ்விரு முறையில் காரணி வருமானமே காணப்படும். எனவே இக்கூற்றினை ஏற்கலாம்.
(03 புள்ளிகள்)

(v)
- மெய்மொத்தத் தேசிய உற்பத்தி என்றால் நிலையான விலையில் கணிக்கப்பட்ட உற்பத்திப் பெறுமதியாகும். இதில பணவீக்கமோ பணச் சுருக்கமோ உள்ளடக்கப்படுவதில்லை.
- மெய்த்தேசிய வருமானம் என்பது வர்த்தக மாற்று வீதத்தில் எழுந்த விளைவுகளின் பின் உள்ள மெய்த்தேசிய உற்பத்தியின் பெறுமதியாகும்.
- மெய்த்தேசிய உற்பத்திக்கும் மெய்த் தேசிய வருமானத்துக்கும் இடையிலான வேறுபாடு வர்த்தக மாற்று வீதம் ஏற்றுமதியில் ஏற்பட்ட பாதிப்பின் மூலம் காட்டுகின்றது.

மெய்த் தேசிய வருமானம் = மெய்த் தேசிய உற்பத்தி + ஏற்றுமதிக் கொள்வனவுச் சக்தி − நிலையான விலையின் கீழ் ஏற்றுமதிப் பெறுமதி

(03 புள்ளிகள்)

05. i
- செலவிடத்தக்க வருமானத்தில் ஏற்படும் வித்தியாசத்துக்கும் தனியார் நுகர்வில் ஏற்படும் வித்தியாசத்துக்கும் இடையிலான விகிதாசாரத் தொடர்பே எல்லை நுகர்வு நாட்டம் ஆகும.

$$MPC = \frac{\Delta C}{\Delta Yd}$$

(01 புள்ளி)

- செலவிடத்தக்க வருமானத்தில் ஏற்படும் வித்தியாசத்துக்கும் தனியார் சேமிப்பில் ஏற்படும் வித்தியாசத்துக்கும் இடையிலான் விகிதாசாரத் தொடர்பு எல்லைச் சேமிப்பு நாட்டமாகும்.

$$MPS = \frac{\Delta S}{\Delta Yd}$$

(01 புள்ளிகள்)

[பக். 7 ஐப் பார்க்க

- எளிய பொருளாதாரமொன்றில் செலவிடத்தக்க வருமானமானது நுகர்விலும் சேமிப்பிலுமே ஈடுபடுத்தப்படுகின்றது. எனவே வருமான மாற்றம் நுகர்வு மாற்றத்துக்கும் சேமிப்பில் ஏற்படும் மாற்றத்துக்கும் சமமாகக் காணப்படும்.

$C + S = Yd$

$\frac{\Delta C}{\Delta Yd} + \frac{\Delta S}{\Delta Yd} = \frac{\Delta Yd}{\Delta Yd}$


$MPC + MPS = 1$ (02 புள்ளிகள்)

(ii) தேசிய வருமானம் வீழ்ச்சியடையாமலோ, அதிகரிக்காமலோ மாற்றமின்றி நிலையான மட்டத்தில் தக்க வைத்துக்கொள்ளும் நிலை தேசியவருமானச் சமநிலமட்டம் எனப்படும். (02 புள்ளிகள்)
இதற்கான விதி,

1) மொத்த வருமானம் = மொத்தச் செலவு
$Y = C + I + G$ (01 புள்ளி)

2) மொத்த உட்பாய்ச்சல் = மொத்த வெளிப்பாய்ச்சல்
$J = W$ (01 புள்ள
$I + G = S + T$

(iii)




$Y_1$ வருமான மட்டத்தில் $Y < E$ ஆக இருப்பதால் இருப்பில் பற்றாக்குறை ஏற்படும். உற்பத்தி அதிகரிக்கும்
$Y_3$ வருமான மட்டத்தில் $Y > E$ ஆக இருப்பதால் இருப்பில் மிகை ஏற்படும். உற்பத்தி குறையும்.
$Y_2$ வெளியீட்டு மட்டத்தில் $Y = E$ ஆக இருப்பு பூச்சியமாக இருப்பதால் உற்பத்தி சமநிலை மட்டத்தில் காணப்படும். (04 புள்ளிகள்)

(iv) (அ) $Y = E$

$Y = C + I + G$

$Y = 180 + 0.8\, yd + 120 + 160$

$Y = 180 + 0.8\,(Y - 100) + 120 + 160$

$Y = 460 + 0.8\, y - 80$

$Y = 380 + 0.8\, y$

$Y - 0.8\, y = 380$

$0.2\, y = 380$

$y = \frac{380}{0.2}$

$y = 1900$ அல்லது

(02 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

$W = J$
$S + T = I + G$
$-180 + 0.2\,yd + 100 = 120 + 160$
$-180 + 0.2\,(y - t) + 100 = 280$
$-180 + 0.2\,(y - 100) + 100 = 280$
$-100 + 0.2\,y = 280$
$0.2\,y = 380$
$y = 1900$ (02 புள்ளிகள்)

(ஆ) வரிப் பெருக்கி

$K_T = \frac{-b}{1-b}$

$\frac{-0.8}{(1-0.8)}$

$\frac{-0.8}{0.2}$

$-4$

அரச செலவுப் பெருக்கி


$K_T = \frac{1}{1-b}$

$\frac{1}{1-0.8}$

$\frac{1}{0.2}$

$5$

(v)




(02 புள்ளிகள்)

**நிறைதொழில் மட்டம சமநிலை வெளியீட்டு மட்டம்**

- ஒரு நாட்டின் நிறைதொழில் வெளியீட்டு மட்டத்தை பேணிச் செல்ல வேண்டுமாயின் மிகைக் கேள்வியை விட மெய்ரீதியாக மிகைக்கோள்வியானது அதிகரிப்பதால் விலை மட்டம் அதிகரித்தல் பணவீக்க இடைவெளி எனப்படும். மேலுள்ள வரைபடத்தில் A - B இடைவெளி இதனைக் காட்டி நிற்கின்றது.
- ஒரு நாட்டில் நிறை தொழில் வெளியீட்டு மட்டத்தைப் பேணிச் செல்ல மிகைக் கேள்வியை விட மெய்ரீதியான மிகைக் கேள்வி வீழ்ச்சியடைந்து காணப்படல். குறை வளப்பயன்பாடானது வேலையின்மை இடைவெளியினால் காட்டப்படும் மேலுள்ள வரைபடத்தில் $Y_F - Y_1$ இனால் இது காட்டப்பட்டுள்ளது.

(02 புள்ளிகள்)

[பக். 9 ஐப் பார்க்க

## பகுதி II

06. (i)
- பணப்பரிமாற்றூடகம்
- பெறுமானத்திரட்டு
- கணக்கீட்டு அலகு
- பிற்போடப்பட்ட கொடுப்பனவுகளின் நியமம் (04 புள்ளிகள்)

(ii) (அ) வங்கியின் மிகை ஒதுக்கத்தின் அளவு = 200 - (1800 x 10/100)
= 200 - 180
= 20 (02 புள்ளிகள்))

(ஆ) வங்கியின் ஐந்தொகை

| பொறுப்புக்கள் | | சொத்துக்கள் | |
|---|---|---|---|
| வைப்பு | 1820 | ஒதுக்கு | 200 |
| | | கடன் | 1620 |
| | 1820 | | 1820 |

(02 புள்ளிகள்)

வைப்பு சரியாகக் காட்டப்பட்டால் 01
கடன் சரியாகக் காட்டப்பட்டால் 01

(இ) சீராக்கம் செய்யப்பட்ட பின் ஐந்தொகை

| பொறுப்பு | | சொத்து | |
|---|---|---|---|
| வைப்பு | 1800 | ஒதுக்கு | 180 |
| | | கடன் | 1620 |
| | 1800 | | 1800 |

வைப்பு சரியாகக் காட்டப்பட்டால் 01
கடன் சரியாகக் காட்டப்பட்டால் 01 (02 புள்ளிகள்)

(iii) (அ)
- பொதுமக்களின் கையிலுள்ள காசு $C_p$
- වාණිජ බැංකු සතු ව්‍යවහාර මුදල් $C_{KB}$
- வணிக வங்கிகளின் பேரில் மத்திய வங்கியிலுள்ள ஒதுக்கு RR
- அரச பிரதிநிதித்துவ நிறுவனங்கள் மத்திய வங்கியில் பேணப்படும் வைப்புக்கள் $DG_{oi}$

(02 புள்ளிகள்)

(ஆ) பணப்பெருக்கி குறைந்தபட்சம் 1 ஆக இருத்தல் வேண்டும். ஏனெனில், பண நிரம்பலில் குறைந்தபட்சம் தள நாணயமாவது காணப்படல் வேண்டும். எனினும் பண ஆக்கத்தின் போது பண நிரம்பல் அடித்தளப் பணத்தை விட அதிகரிக்கும். இங்கு பணப்பெருக்கி 1 ஐ விட கூடிய பெறுமதி பெறும். (02 புள்ளிகள்)

(iv)
- வட்டி வீதத்தை குறைத்தல்
- ஒதுக்கு வீதத்தைக் குறைத்தல்
- பகிரங்கச் சந்தையில் உண்டியல்கள் கொள்வனவு செய்தல். (மீள் விற்பனைக்கு) (03 புள்ளிகள்)

(v) உள்ளீடுகளின் விலை கூடுவதால் மிகை நிரம்பல் கோடு இடதுபக்கம் நகர விலைமட்டம் உயர்வது செலவுத் தூண்டல் பணவீக்கமாகும்.” அதில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய முக்கிய காரணிகள்
(i) தொழிற்சங்க நடவடிக்கைகளின் விளைவாக சம்பள அதிகரிப்பு ஏற்படுதல்
(ii) சிலுருரிமை நிறுவனங்கள் தமது இலாப எல்லையை அதிகரித்தல்
(iii) நிரம்பல் குறைவதால் செலவு அதிகரித்தல் (03 புள்ளிகள்)

[பக். 10 ஐப் பார்க்க

07. (i) பொதுச் சேவைகளை வழங்குவதற்கு அரசாங்கத்துக்கு உள்ள கடப்பாடுகளை மேலும் வெற்றிகரமாக மேற்கொள்ளும் நோக்குடன் தனியார் துறையின் உதவியைப் பெற்றுக் கொள்ளப் பயன்படுத்தும் முயையே P.P.P. முறையாகும். இது BOO, BOT, BOOT, என பல்வகைப்படும். (02 புள்ளிகள்)

**P.P.C. மூலம் கிடைக்கும் நன்மைகள்**

1. அரச கடன்களை வரையறுக்க முடிதல்
2. வினைத்திறன் அதிகரித்தல்
3. செயற்றிட்டங்களில் விளைதிறனையும் பண்பு ரீதியான தன்மையையும் அதிகரித்தல்
4. விருத்தியுற்ற தொழிநுட்பத்தைப் பெற்றுக் கொள்ள முடிதல்
   (ஒரு காரணிக்கு 1 புள்ளி வீதம் இரு காரணிகளுக்கு 02 புள்ளிகள்)

(ii)
1. சமமற்ற வருமான, செல்வப் பங்கீட்டைக் குறைத்தல்
2. வினைத்திறனுடன் வளங்களை முகாமைசெய்தல்
3. உயர் சமூகச் செலவை ஏற்படுத்தும். சில நுகர்வுகளை ஊக்கமிழக்கச் செய்தல்
4. மிகைக் கேள்வியிலான செல்வாக்குகள் (நுகர்வுக் கேள்வி, முதலீட்டுக் கேள்வி மூலம் முகாமை செய்தல்)
5. மிகை நிரம்பலிலான செல்வாக்கு (வரி விலக்கு, வரிச்சலுகை மூலம் மிகை நிரம்பலை ஊக்குவித்தல்)
6. சென்மதி நிலுவைப் பிரச்சினையை இழிவளவாக்குதல். (04புள்ளிகள்)

(iii) நடைமுறைச் செலவு
1. பண்டங்கள் சேவைகளின் செலவு
2. நடைமுறை மாற்றல்கள்
3. அரச கடன் வட்டி செலுத்தல் (02 புள்ளிகள்)

மூலதனச் செலவு
1. தேறிய சொத்துக்களை கையேற்றல்
2. மூலதன மாற்றல்கள்
3. தேறிய கடன் கொடுத்தல் (02 புள்ளிகள்)

(iv) (அ) நடைமுறைக் கணக்கு மீதி = -3500
(ஆ) மொத்த நிலுவை = -9000
(இ) ஆரம்பக் கணக்கு மீதி = -8500
(ஈ) அரச நுகர்வு = 15000

(அ) நடைமுறைக் கணக்கு மீதி = மொத்த வருமானம் - நடைமுறைச் செலவு
(ஆ) மொத்த நிலுவை = மொத்த வருமானம் + நன்கொடைகள் - மொத்தச் செலவு
(இ) ஆரம்ப மீதி = மொத்த வருமானம் + நன்கொடைகள் - அரச கடன் வட்டி தவிர்ந்த மொத்த செலவு
(ஈ) அரச நுகர்வு = நடமுறைச் செலவு - (அரச கடன்வட்டி + நடைமுறை மாற்றல்)
(04 புள்ளிகள்)

(v)
- ★ அரசகடன் திருப்பிக் கொடுத்தலுக்கான நிபந்தனையை மாற்றியமைத்தல், அரச நிதியைச் சீரமைத்தல் போன்ற எந்தவொரு தேவையுமின்றி ஒரு நாட்டிற்கு தனது நிகழ்கால எதிர்கால கடன் தொடர்பான பொறுப்புக்களை பூர்த்தி செய்யக் கூடிய ஆற்றல் அரச கடனின் நிலைபேரான தன்மை என இனங்காணலாம். (02 புள்ளிகள்)
- ★ இதற்காகப் பயன்படுத்தப்டும் பிரதான சுட்டி அரச கடன் சேவை விகிதமாகும். இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரச வருமானம் அல்லது அரச செலவின் விகிதாசாரமாகக் காட்டப்படும்.

$$\text{அரச கடன் சேவை விகிதம்} = \frac{\text{உள்நாட்டு வெளிநாட்டு கடன் தவணைப்பணம் மீள் செலுத்தலும் அதற்கான வட்டிக் கொடுப்பனவும்}}{\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி}} \times 100$$

★ போக்கு

2010 = 14.6%
2011 = 13.7%
2012 = 13.4% (02 புள்ளிகள்)

[பக். 11 ஐப் பார்க்க

08. (i) (அ) முழு நன்மைக் கோட்பாட்டின் படி குறிப்பிட்டதொரு பொருளாதார அலகொன்றுக்கு சார்பு அடிப்படையில் குறைந்த செலவில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி தொடர்பானதாகும். அதன்படி குறைந்த செலவில் அல்ல செயற்றிறனுள்ள உற்பத்தி பொருட்களை சிறப்புத் தேர்ச்சி அடிப்படையில் சர்வதேச சந்தைக்கு வழங்குவதாகும்.

ஆனால் ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடானது அமயச் செலவு அடிப்படையில் தீர்மானிக்கப்படுவதாகும். அதன்படி மற்றைய நாட்டுடன் சார்பளவில் குறைந்த அமயச் செலவுடைய பண்டத்தினை சிறப்புத் தேர்ச்சி அடிப்படையில் சர்வதேச வர்த்தகத்துக்கு வழங்குவதாகும். (03 புள்ளிகள்)

(ஆ) (1) பூரண காரணி அசைவு
(2) மாறா அளவுத்திட்ட விளைவு
(3) உற்பத்தி அல்லது நுகர்வு தொடர்பான வெளிவாரிகள் தோன்றுவதில்லை.
(4) போக்குவரத்துச் செலவு கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

(ஒரு காரணத்திற்கு 1 ஒரு புள்ளி வீதம் 2 புள்ளிகள்)

(ii) (அ)
- குழந்தை நிலையில் உள்ள கைத்தொழிலை பாதுகாக்க முடிந்தமை
- உறுதித் தன்மைக்காக பன்முகப்படுத்தல் அவசியம்
- வீழ்ச்சியை தடுத்தல்
- நிறைதொழில் மட்டத்தைப் பாதுகாத்தல்
- தேசிய பாதுகாப்பு
- சுயதேவை பூர்த்தியடைதல்
- சென்மதி நிலுவைப் பிரச்சினையை இழிவளவாக்குதல்

(ஒரு காரணத்திற்கு 1 ஒரு புள்ளி வீதம் 2 புள்ளிகள்)

(ஆ)
- பங்கீட்டு / கோட்ட முறையை நடைமுறைப்படுத்தல்
- உள்நாட்டு உற்பத்திக்கு மானியம் அல்லது ஊக்குவிப்பு வழங்கல்
- நாணய மாற்று வீதத்தைக் கட்டுப்படுத்தல்
- ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடு
- வர்த்தகத் தடை ஏற்படுத்தல்
- நிர்வாக, தொழிநுட்பத் தர நிர்ணயம் விதித்தல்

(ஒரு காரணத்திற்கு 1 ஒரு புள்ளி வீதம் 2 புள்ளிகள்)

(iii) கம்பனிப் பங்குகள், வைப்புச் சான்றுகள், பிணைப் பத்திரங்கள், வணிகப் பத்திரங்கள் பணச் சந்தைக் கடன் கருவி போன்றன. (01 புள்ளி)

நேரடி முதலீடு என்பது உள்நாட்டு உற்பத்தியில் வெளிநாட்டார் மேற்கொள்ளும் முதலீடாகும். (01 புள்ளி)

தொகுதி முதலீடு போலன்றி வெளிநாட்டு நேரடி முதலீடானது மனித மூலதனம், தொழிநுட்பம், முகாமைத்துவம் என்பன கிடைக்கும். உள்நாட்டு வேலைவாய்ப்பு வீதம் அதிகரித்தல், கைத்தொழில் துறையில் பின்னனி, முன்னனித் தொடர்புகள் ஏற்படல் என்பன ஒரு நாட்டில் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகும். (02 புள்ளிகள்)

(iv)
1. பாரம்பரிய ஏற்றுமதிகளை ஊக்குவித்தல்
2. ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை ஏற்படுத்தல்
3. ஏற்றுமதிப் பண்முகப்படுத்தல்
4. வெளிநாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தங்களைச் செய்தல்
5. இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்களை ஆரம்பித்தல்
6. உள்நாட்டு நாணய மதிப்பிறக்கம் செய்தல், மதிப்பிழக்கச் செய்தல்
7. உள்நாட்டு பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி ஏற்றுமதியில் போட்டித்தன்மை உயர்த்தல்
8. தேவையற்ற இறக்குமதிகளை ஊக்கமிழத்தல் (ஒரு காரணத்திற்கு 1 ஒரு புள்ளி வீதம் 3 புள்ளிகள்)

(v)
- இலங்கை மத்திய வருமானம் பெறும் நாடாகையால் சலுகைக் கடன் பெறாமல் சலுகையற்ற கடனுக்கு மாறல்
- மேற்கத்தேய இருபக்க கடன்கள் ஐரோப்பிய சமூகத்தில் இருந்து பெறும் சலுகைக் கடன்கள் குறைத்து அதற்குப் பதிலாக வர்த்தகக் கடன் பெறல்
- சலுகைக் கடன் வரையறுக்கப்பட்டுள்ளதால் அரசாங்கம் 15 வருட தவணைக்காலத்தையுடைய நீண்ட கால கடன் நிதியை நிதிச் சந்தையில் இருந்து பெற்றுக்கொள்ளல்
- குறுங்காலக் கடன் மூலதன மூலங்களில் கடன் பெறுவதால வட்டிச் செலவு அதிகரித்தல் (04 புள்ளிகள்)

[பக். 12 ஐப் பார்க்க

**09.** (i) (அ) ● அமயச் செலவாக - நிகழ்கால நுகர்வைத் தியாகம் செய்தல்
- ● சூழல்
- ● விலை வீக்கம்
- ● சமமற்ற வருமானப் பங்கீடு ஏற்படல் (03 புள்ளிகள்)

(ஆ) - பொருளாதார அபிவிருத்தியென்பது பரிணாம வளர்ச்சிச் செயற்பாடாகும். அதாவது, அளவுரீதியான, பண்புரீதியான, கட்டமைப்பு மாற்றங்கள் பொருளாதார அபிவிருத்தி எனக் கருதப்படுகின்றது. (02 புள்ளிகள்)

- பொருளாதார அபிவிருத்தியின்போது பின்வரும் கட்டமைப்பு மாற்றங்கள் இடம்பெற வேண்டும்.
  - துரியத கைத்தொழிலாக்கம்.
  - விவசாயத் துறையில் பங்களிப்பு ஒப்பீட்டு ரீதியில் குறைவடைதல்
  - வர்த்தகக் கோலத்தில் ஏற்படும் மாற்றம்
  - உற்பத்தி வளங்களின் விளைதிறன் அதிகரித்தல்
  - புத்தாக்கம் (ஏதாவது இரு காரணங்களுக்கு 2 புள்ளிகள்)

(ii) - மனித வறுமை என்பதால் கருதப்படுவது சுதந்திரம், சுயகௌரவம், ஆத்மதிருப்தி, அன்னியர்களின் அக்கரை என்பவற்றை அனுபவித்து சுகநலமும் மகிழ்ச்சியும் கொண்டதாக வாழ்க்கையை அமைத்துக்கொள்ளப் பொருத்தமான மனித அபிவிருத்திக்கான வாய்ப்பும் தேர்வும் இழக்கப்பட்ட நிலையாகும். (02 புள்ளி)

- மனித அபிவிருத்தி என்பது, நீண்ட ஆயுளுடன் கூடிய நல்ல வாழ்வாதாரத்துடன் நோயின்றி வாழ்வதற்குத் தேவையான வளங்கள் பெற்றுக்கொள்ள இடமளிக்கக்கூடிய தெரிவுச் சுதந்திரத்துடன் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தக் கூடிய செயற்பாடாகும். (01 புள்ளி)

மேலுள்ள வரைவிலக்கணத்தின்படி மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதகமான நிலையிலிருந்து சாதகமான நிலைக்கு மாற்றுவது மானிட அபிவிருத்தியாகும். இதன் பிரதான நியதிகள்
- சிறந்த வாழ்வாதாரத்துக்குத் தேவையானவை
- சுகாதார நிலை
- பாதுகாப்பு
- தெரிவுச் சுதந்திரம்
- சமூகத் தொடர்பு என்பனவாகும். (01 புள்ளி)

(iii) (அ) i நீண்ட ஆயுள் (சுகாதாரம்)
ii அறிவு (கல்வியறிவு)
iii சிறந்த வாழ்வுநிலை (03 புள்ளிகள்)

(ஆ) i சுகாதாரம்
ii கல்வி
iii வாழ்வு நிலை (03 புள்ளிகள்)

(iv) (i) - கிராமிய போக்குவரத்து அபிவிருத்தி (மக நெகும)
- கிராமிய மின்சார அபிவிருத்தி
- சிறிய நீர்ப்பாசனத்துறைப் புனரமைப்பு
- கிராமியத் துறையில் தகவல் தொழில் நுட்ப விருத்தி
- போக்குவரத்து வலையமைப்பு, துறைமுகம், விமானச் சேவை மற்றும் சிறு நகர அபிவிருத்திக்கு முன்னுரிமை அளித்தல்
- திவிநெகும் நிகழ்ச்சித் திட்டம்
- பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (வடக்கின் வசந்தம், வெல்லஸ்ஸயை மலரச் செய்வோம், கிழக்கின் உதயம்.) (03 புள்ளிகள்)

[பக். 13 ஐப் பார்க்க

10. (i) சௌபாக்கியச் சுட்டெண் (01 புள்ளி)

| **ஆண்டு** | **சௌபாக்கியச் சுட்டெண்** |
|---|---|
| 2011 | 62.5 |
| 2012 | 66.8 |

(02 புள்ளிகள்)

(ii) - மொத்த உள்நாட்டு உற்பத்தியை 185 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்தல்
- வேலையின்மையை 3% ஆகக் குறைத்தல்
- வறுமையை 2% ஆகக் குறைத்தல் (03 புள்ளிகள்)

(iii) - இலங்கை தொடர்பாக பூகோள ரீதியாக சிறந்த மனப்பாங்கை ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- உல்லாசப் பிரயாணத்துறையைக் கவரக்கூடிய முக்கியமான துறைகளை உள்ளடக்கக் கூடிய முறையில் பன்முகப்படுத்தப்பட்ட விரிவான சந்தையொன்றை உருவாக்கக் கூடிய உபாய முறைகளைக் கையாள்தல்
- அதிகரிக்கும் கேள்விக்கேற்ற விதத்தில் உல்லாசப் பிரயாண ஹோட்டல்களை அமைத்தல்
- சுற்றுலாக் கைத்தொழிலுடன் தொடர்புடைய ஒழுங்கற்ற துறைகளுக்கு ஒழுங்குபடுத்தல் உபாயங்களைத் திட்டமிடல்
- கவர்ச்சிகரமான சுற்றுலாச் சூழல்களை சிறந்த முறையில் பேணலும் விருத்தி செய்தலும்.
- புகையிரதச்சேவை, போக்குவரத்து வலையமைப்பு, விமான நிலையம் போன்றவற்றின் வசதிகளை விருத்தி செய்தல்.
- வாடிக்கையாளர்களின் தேவைகளை சிறந்த முறையில் புரிந்துகொள்ளக் கூடிய முறையில் ஊழியர் படைக்குப் பயிற்சியளித்தல்

(iv) உயர்ந்த சாதனை மட்டத்தை அடைந்திருத்தல்
- 2000 ம் ஆண்டு முன்வைக்கப்பட்ட புத்தாயிர அபிவிருத்தி இலக்கை 2015 ஆகும்போது அடையப்பெற வேண்டும். அடுத்த இலக்குகளில், இழிநிலை வறுமையை பூண்டோடு அழிக்க வேண்டும் என்பது முக்கியமானதொன்றாகும்.
- இலங்கை 2000 ஆண்டு முதல் 2013 ஆண்டுவரை குறிப்பிடத்தக்க அளவில் வறுமையை வீழ்ச்சியடையச் செய்துள்ளது.

| ஆண்டு | சனத்தொகை வறுமை வீதம் |
|---|---|
| 2002 | 22.7 |
| 2006/7 | 15.2 |
| 2009/10 | 8.9 |

(04 புள்ளிகள்)

(v) திவி நெகும் நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள்கள் நான்கு
(i) குடும்பப் போசனை மட்டத்தை அதிகரித்தல்
(ii) குடும்பத்தின் நாளாந்த வாழ்க்கைச் செலவைக் குறைதல்
(iii) குடும்பத்தில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தல்
(iv) குடும்பத்துக்கான மேலதிக வருமான மார்க்கத்தை உருவாக்கல் (02 புள்ளிகள்)

**செயற்படுத்தும் முறை:**

முதலாம் கட்டம் : மகிழ்ச்சிகரமான வீடும் அழகான தாய் நாடும்" என்ற கருப்பொருளில் 10 இலட்சம் உள்ளக பொருளாதார அலகுகளை ஆரம்பித்தல்

இரண்டாம் கட்டம் : மரக்கறி வகை, பழக்கன்றுகள் ஏனைய வர்த்தகப் பயிர்களைப் பெற்றுக்கொடுப்பதுடன் வீட்டுப்பொருளாதாரத்தில் 2.1 மில்லியன் கிராமிய பொருளாதார அலகுகளைப் பயன்பெறச் செய்தல்.

மூன்றாம் கட்டம் : 2.5 மில்லியன் கிராமிய பொருளாதார அலகுகள் பயன்பெறக்கூடிய வகையில் விளங்கு வளர்ப்ப, களஞ்சிய வசதி, சிறய அளவிலான நெல்குற்றும் ஆலைகள், உணவு பதனிடும் நிலையங்களை ஆரம்பித்து ஒரு கிராமத்தில் 200 குடும்பங்களுக்கு திவிநெகும முயற்சியாளர் கிராமங்களை உருவாக்கல்

[பக். 14 ஐப் பார்க்க

நான்காம் கட்டம் : விதையினங்கள், பழவகை, தென்னை, சிறு ஏற்றுமதிப் பயிர்கள், மருத்துவத் தாவரங்கள் பெற்றுக்கொடுத்தல் 1/4
ஏக்கரிலிருந்து 2 1/2 ஏக்கர் வரை நிலமுடையவர்களுக்கு வர்த்தகப் பயிர் செய்கை மேற்கொள்வதற்கு உதவியளித்தல். இதன் மூலம் பயனடைவோர் 5 மில்லியனாகவும் இச்செயற்றிட்டத்துக் செலவாகும் தொகை 5.9 மில்லியன் னளவு மதிப்பிட்டுள்ளது.
2013 ஆ ம்
ஆண்டில் திவிநெகும் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதுடன் திவி நெகும தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில் சட்ட அங்கீகாரம் உருவாக்கல்.

சமுர்த்தி அதிகார சபை, தெற்கு அபிவிருத்தி அதிகார சபை மலையக அபிவிருத்தி அதிகார சபை என்பன ஒன்றிணைந்து திவி நெகுமத் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(04 புள்ளிகள்)